# திராவிடன்

ஆசிரியர் : என். வி. என்.


சிங்காரச் சென்னையில் சீர்மிகு வெற்றி விழா



அறிஞர் அண்ணா—வெற்றி வீரர் ப. உ. ச.

வ. ஆ. மா. செ. இரா தருமலிங்கம் எம்.பி., தோழர் ப. உ. ச. அமைப்புச் செயலாளர் என். வி. என். (ஊர்வலம்)


13—7—63
10 பக்கங்கள்

வாரஇதழ்

16 காசு.

## தமிழக அமைச்சர்களே!

# தேர்தல் முடிவுக்குப் பிறகுமா தெளிவு பிறக்கவில்லை?

### சென்னை வெற்றி விழாக் கூட்டத்தில் ப. உ. ச. வீர முழக்கம்!

○

"போலீசு இலாகாவைக் கையிலே வைத்துக்கொண்டிருக்கிற காமராசர், நிதி இலாகாவைக் கையிலே வைத்துக்கொண்டிருக்கின்ற பக்தவத்சலம், அரிசன மானியத்தைக் கையிலே வைத்துக் கொண்டிருக்கின்ற கக்கன், விளம்பர இலாகாவை வைத்துக் கொண்டிருக்கின்ற பூவராகன், உள்ளாட்சித்துறையை வைத்துக் கொண்டிருக்கின்ற மஜீத்—இப்படிப்பட்ட அமைச்சர்கள், இடைத் தேர்தலில் வெற்றிபெற திருவண்ணாமலைத் தொகுதியிலே வந்து முயற்சித்தார்கள்—முகாமிட்டார்கள்; அவ்வளவு பேர்களுடைய முயற்சியும் வியர்த்தமாகியது! தோல்வி அடைந்தார்கள்!

"நாம் வெற்றி பெற்றோம் என்றால், நாம் வெற்றி பெற்றதற்கு ஒரே காரணம், நாட்டை ஆளுகின்ற அமைச்சர்களிடத்தில் பொதுமக்கள் நம்பிக்கை வைக்கவில்லை என்பதுதான். அறிஞர் அண்ணா அவர்களிடத்திலும், திராவிட முன்னேற்றக் கழகத்திடத்திலும் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்றால், ஒரே காரணம் நம்மிடத்தில் பணமும் இல்லை — பணமும் கொடுக்கவில்லை என்பதுதான்.

"நம்மிடத்திலே உள்ள இலட்சியமே தவிர, வேறு எதுவுமே இந்த வெற்றிக்குக் காரணமல்ல என்று தெள்ளத் தெளிவாக ஆட்சியாளருக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

"நான் வெற்றி பெற்றுவிட்டேன் என்ற செய்தி அறிவிக்க அரைமணி நேரம் இருக்கின்ற நேரத்தில், ஓட்டுக்கள் எண்ணப்படும் சாவடிக்கு எதிராகப் பெருந்திரளாகக் கூடியிருந்த பொதுமக்களை வரிசையாக நிற்கவைத்துக் கொண்டிருந்தார்கள் போலீசார்.

இந்த நேரத்தில், காங்கிரசுத் தொண்டர்கள் பெரியகொடியைத் தூக்கிக்கொண்டு அவ்வழியே ஊர்வலமாக வந்தார்கள். வந்தவர்கள் என்ன முழக்கமிட்டார்கள் என்றால், அதுதான்வேடிக்கை—விசித்திரம்.

அந்த வேடிக்கை—விசித்திரம் என்னவென்றால், "1967-ல் திராவிட முன்னேற்றக் கழகத்தை முறியடிப்போம்; 1967-ல் சண்முகத்தை முறியடிப்போம்" என்ற முழக்கந்தான்.

"1967-ல் நாங்கள் வெற்றி பெறுவோம்" என்று சொல்லிக் கொண்டு, ஓட்டு எண்ணப்படும் சாவடிக்கு முன்னே வந்தார்கள் காங்கிரசுத் தொண்டர்கள்!

அப்போது போலீசார் அவர்களைத் தடுத்தார்கள்; மாவட்ட போலீசு சூப்பிரண்டெண்ட் இராசகோபால் முன்னின்று தடுத்தார்.

இப்படித் தடுத்தும், எவ்வளவோ எடுத்துச் சொல்லியும், காங்கிரசுத் தொண்டர்கள் விடாது. ஓட்டு எண்ணப்படும் இடம்நோக்கி ஓடுவதற்குப் பெருமுயற்சி எடுத்துக் கொண்டனர்!

அதற்குப் பின்னால் ஒரு பயங்கரச் சதியே மறைந்திருந்தது என்று எனக்குப் பின்னாலே தெரியவந்தது. ஓட்டு எண்ணிக் கொண்டிருந்த கீற்றுக்கொட்டகைக்குத் தீ வைக்க அவர்கள் முயற்சித்திருக்கிறார்கள்!

போலீசார், அவர்களைத் தடுத்தார்கள்! தடுத்த போலீசாரை காங்கிரசுத் தொண்டர்கள் தள்ள போலீசு அதிகாரி கீழே உருண்டு விழுந்தார்!

அவர் கீழே விழுந்ததற்குப் பிறகு, அங்கு சுற்றி நின்ற ரிசர்வ் போலீசார், உயர் அதிகாரியின் உத்தரவு பெற்று தடியால்அடிக்க ஆரம்பித்தார்கள்!

உடனே காங்கிரசுத் தொண்டர்கள் சிதறி ஓடினார்கள்! பொதுமக்கள்மீது அடிபட்டது! 200 300-க்கு மேற்பட்ட தாய்மார்களும், அவர்களுடைய குழந்தைகளும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தொண்டர்களும் படுகாயமடைந்தார்கள்!

இந்தச் செய்தியை செஞ்சியிலே இருந்த காமராசருக்குக் காங்கிரசார் தவறாக எடுத்துச் சொன்னார்கள்; மறுநாள் டி. ஐ. ஜி.-யை அனுப்பி விசாரிக்கச் சொன்னார்கள்.

விசாரணை செய்ய வந்தவர் காங்கிரசுத் தொண்டர்களையும், போலீசாரையும் மட்டுமே விசாரித்தார்; 'போலீசார் செய்தது நியாயம்' என்று அவர் எழுதி வைத்துவிட்டுச் சென்றுவிட்டார்.

இதற்குப் பிறகு நான் காமராசரைக் கேட்கிறேன்—

"முதலமைச்சர் காமராசரே! தேர்தலிலே வெறிச் செயலிலே ஈடுபட்டிருந்தீர்கள்; தேர்தல் முடிந்த பிறகாவது அரசியல் நாணயத்தை — நாகரீகத்தைக் கடைபிடித்திருக்க வேண்டும்; ஏன் தவறிவிட்டீர்கள்?

"நாணயமுள்ள முதலமைச்சராக இருந்திருந்தால் காங்கிரசுத் தொண்டர்களைக் கண்டித்திருக்க வேண்டும்; 'எப்பொழுது சண்முகம் வென்றுவிட்டான்' என்று அறிவிக்கப்பட்டுவிட்டதோ — எப்போது தி. மு. கழகம் வெற்றி பெற்றுவிட்டது என்று தெரிந்துவிட்டதோ—எப்போது காங்கிரசு தோற்றுவிட்டது என்று தெரிந்துவிட்டதோ—உடனே காங்கிரசுத் தொண்டர்கள் அந்த இடத்திக்கு வந்து '1967-ல் தி.மு. கழகத்தை முறியடிப்போம்' என்று கூக்குரலிட்டதை, 'அரசியல் அநாகரிகம்' என்று கண்டித்திருக்க வேண்டாமா? இன்றுவரை அவர்களைக் கண்டிக்கவில்லையே என்ன காரணம்?

ஒருவேளை நான் சந்தேகிக்கிறேன்—செஞ்சியிலிருந்தார் காமராசர்; திருவண்ணாமலைக்கும்—செஞ்சிக்கும் வெகு தூரமில்லை; 22 மைல்கள்தான்; 22 மைல் தூரத்திலிருந்த காமராசர், காங்கிரசுத் தொண்டர்களுக்குச் சொல்லி அனுப்பி, அவரே தூண்டிவிட்டு இந்த மாதிரிச் செயலைச் செய்யச் சொல்லியிருப்பாரோ என்று!

நாட்டை ஆளுகின்ற முதலமைச்சர்—நாணயத்தைக் கடைபிடிக்க வேண்டிய முதலமைச்சர்—சனநாயகத்தை மறந்துவிட்டிருந்தாலும், சனநாயகத்திற்குக் களங்கத்தை ஏற்படுத்தியிருந்தாலும் தோல்வியை ஒப்புக்கொள்ள வேண்டிய முதலமைச்சர்—அங்கு அநாகரிக வெறிச் செயலிலே காங்கிரசுத் தொண்டர்களை தூண்டிவிட்டுச் செய்திருக்கிறார் என்றால், இதைவிட வெட்கக் கேடு வேறு என்ன இருக்கமுடியும்?

காங்கிரசுத் தொண்டர்கள், 'தி. மு. கழகத்தை 1967-ல் தோற்கடிக்கப் போகிறோம்' என்று சொல்லி ஊர்வலமாகவந்தார்கள். இதுவரை முதலமைச்சர், அவர்களைக் கண்டிக்கவில்லை; இதற்காக நான் எனது பலத்த கண்டனத்தை முதலமைச்சருக்குத்தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பணத்தைக் கட்டவிழ்த்துவிட்டார்கள்; எனக்குத் தெரிந்த தகவல்படி, அன்றையத்தினம்—தேர்தலுக்கு முன்தினம் மட்டும்—இரண்டேகால் இலட்சம்ரூபாயை அங்கு பிரிந்து, கிராமங்களுக்கெல்லாம் கொடுத்து அனுப்பினார்கள்!

ஒரு நகரத்திற்கு ஓட்டு ஒன்றுக்கு ரூ. 5! ஓர் இடத்தில் எனக்குச் செல்வாக்கு—தி. மு. கழகத்திற்குச் செல்வாக்கு என்றுதெரிந்தால் அந்த இடத்தில் ஓட்டு ஒன்றுக்கு கு. 10 என்று கொடுத்து எப்படியாவது கழகத்தைத் தோற்கடிக்க வேண்டுமென்ற பெருமுயற்சியில் ஈடுபட்டிருந்தார்கள்!

அமைச்சர்களைக் கேட்கின்றேன் — "அமைச்சர்களே! நீங்களே முன்னின்று இந்த வேலையைச் செய்யலாமா? என்னதான் உங்களுக்கு வெறி இருந்தாலும் —என்னதான் உங்களுக்குக் கோபம் இருந்தாலும், பணத்தைக் கொடுக்கின்ற இடத்திலே அமைச்சர் கக்கன் அவர்களே முன்னின்று பணத்தைக் கொடுத்தார் என்றால், இதைவிட வெட்கங்கெட்ட செயல் வேறு என்ன இருக்கமுடியும்?"

நான் அமைச்சர்களைக் கேட்க விரும்புகிறேன்— ஒரு சாதாரண போலீசுக்காரன் — போலீசுக் கான்ஸ்டபிள், தன்னுடைய முன்னிலையில் சாராயம் காய்ச்சச் சொல்லியிருந்தால் விட்டிருப்பீர்களா?

ஒரு சாதாரண போலீசு கான்ஸ்டபிள் 'பிக்பாக்கெட்' அடிக்கச் சொல்லியிருந்தால் விட்டிருப்பீர்களா?

அதே குற்றத்தைத்தான் நாடாளுகின்ற அமைச்சர்களாகிய நீங்களும் செய்திருக்கிறீர்கள்; என்ன பதில் இதற்கு?

அமைச்சர் கக்கன் அவர்களே இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார் என்றால், இந்த வெட்கக் கேட்டை எங்கே போய்ச் சொல்வது? இவர்களிடமிருந்து சனநாயகத்தை எப்படி நாம் எதிர்பார்ப்பது?

"திருவண்ணாமலையில் பேசிய காமராசர் சொன்னார்—"சண்முகம் உள்ளே வந்து என்ன செய்யப் போகிறார்? தி. மு. கழகத்திற்கு வேண்டுமானால், இருக்கின்ற 50 இடம் 51 ஆகும்; இதைத் தவிர, அங்கு வந்து அவரால் என்னசெய்யமுடியும்?"—என்று!

அதோடு நின்றாரா என்றால், இல்லை—இங்கே எனக்கு முன் பேசிய முஸ்லிம் லீக் நண்பர் சமத் அவர்கள் குறிப்பிட்டதைப்போல்

(9-ம் பக்கம் பார்க்க)

# தலையங்கம்

மலர் 16. 13—7—63 மாலை 47

# நேரு ராஜிநாமா ?

——(00)——

**[ என். வி. என். ]**

——(ரு)——

கடந்த பதினைந்து ஆண்டுகளில் நேரு சர்க்காருக்கு இப்போது ஏற்பட்டுள்ளதைப் போன்ற நெருக்கடி இதுவரை ஏற்பட்டதில்லை. சென்ற ஆண்டு சீன ஆக்ரமிப்பாளர்கள் இந்திய எல்லையில் படையெடுக்க முயற்சித்தபோதிருந்த நெருக்கடிகூட சாதாரணமானது என்று சொல்லக்கூடிய வகையில் பொதுவாக இந்தியத் துணைக் கண்டத்திலும் குறிப்பாக ஒவ்வொரு மாநிலத்திலும் அரசியல் கொந்தளிப்பு ஏற்பட்டிருப்பதை எவரும் மறுத்துவிட முடியாது.

இவ்வித அரசியல் கொந்தளிப்பு அல்லது பரபரப்பு ஆகியவைகளுக்குப் பெரும்பாலும் ஆளுங்கட்சியினரின் அத்துமீறிய போக்கும் சில அமைச்சர்களின் ஜனநாயக விரோதமான நடவடிக்கைகளுமே காரணங்களாக அமைந்துள்ளன. லஞ்சம்; நிர்வாக ஊழல், பதவிச் சலுகை ஆகிய தீய சக்திகள் தாராளமாக வளருவதற்கு அமைச்சர்களே பொறுப்பாளிகளாகயிருந்து வருகிறார்கள் என்று ஆளுங்கட்சியிலிருந்தே அபாய அறிவிப்பு விடப்படுகிறதென்றால் இதைவிட பேராபத்து பண்டித நேருவுக்கும், நேருவின் தலைமைக்கும் வேறு இருக்க முடியாது.

அடுத்தபடியாக நேருவுக்குத் தக்க யோசனைகளை அதுவும் உரிமையுடன் சொல்லக்கூடிய ஆற்றலும் தோழமையும் மிக்க தலைவர்கள், அல்லது சகாக்கள் மேல்மட்டத்தில் இன்று யாருமில்லை. சர்தார் பட்டேல், கோவிந்த வல்லப பந்த், இராசேந்திர பிரசாத் போன்ற காங்கிரஸ் பெருந்தலைவர்களின் மறைவு பண்டித நேருவுக்கு பேரிழப்பாக ஆகிவிட்டதென்றால் மிகையாகாது.

இத்தலைவர்களுக்கும், நேருவுக்கும் அபிப்ராயபேதமிருந்து வந்தது என்பது உண்மைதானென்றாலும், அவர்கள் நேரு சர்க்காரைக் கூடுமான அளவு நேர்மைப்பாதையில் அழைத்துச்செல்ல பெருந்துணைபுரிந்து வந்திருக்கிறார்கள் என்பதை அரசியல் நுணுக்கம் மிக்கவர்கள் அறிவார்கள். போதாக்குறைக்கு திரு. இராசகோபாலாச்சாரியார், திரு. கிருபளானி போன்ற தலைவர்களையும் இன்றைய காங்கிரஸ் மேலிடம் கொடிய விரோதிகளாக்கிக் கொண்டிருக்கிறது.

எனவே, காங்கிரஸ் மேலிடத்திலும் ஆட்சிபீடத்திலும் பிற்போக்குச் சக்திகளின்—அரசியல் அனுபவமற்றவர்களின் செல்வாக்கு மேலோங்கிவிட்டது. அதற்கேற்ப நேருவும் தமது மனச்சாட்சிக்கும் விரோதமாக நடக்கவேண்டிய பரிதாப நிலைக்கு ஆளாகிவிட்டார். இதை நம்மால் உணரமுடிகிறது. ஆனால், அந்தப் பிற்போக்கு சக்திகளின் தர்பாரை தன்மானமுள்ள எவரும் சகித்துக் கொள்ள முடியாதல்லவா ?

தங்கக் கட்டுப்பாடு உத்திரவு, புதிய வரிகள், வரி உயர்வு, கட்டாய சேமிப்புத் திட்டம் ஆகியவைகள் அனைத்தும் எடுத்தேன் கவிழ்த்தேன் என்பதுபோல நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதே யல்லாது, ஏழை-நடுத்தர மக்களின் நல்வாழ்வையோ அல்லது இந்திய அரசுக்கு அதனால் பயன் ஏற்படக்கூடிய விதத்திலோ கொண்டுவரப்பட்டதா யென்றால், இல்லை, இல்லை என்றுதான் அறிவுள்ள எவரும் கூறுவர். இன்னும் சொல்லப்போனால், நேருவுக்கும் தனக்கும் உள்ள பலப்பரீட்சையை அளவிடத்தான் மொரார்ஜி தேசாய் இவ்வாறு துணிந்தாரோ என்றுகூட ஐயப்பட வேண்டியிருக்கிறது.

அதுமட்டுமா—இந்தித் திணிப்பு மசோதாவை நிறைவேற்றிய விதம் சனநாயகத்தை சித்திரவதை செய்யக்கூடியதாகவும், இந்தி பேசாத மக்களுக்கு நம்பிக்கைத் துரோகம் விளைவித்தது போன்றதாயும் உள்ளன. குறிப்பாக தென்னக மக்கள் தங்களின் எதிர்கால வாழ்வை எண்ணி யெண்ணி வேதனையால் அவதியுற்று வருகின்றனர்.

இவையனைத்துக்கும் மேலாக அண்மையில் நடைபெற்ற பாராளுமன்ற—சட்டமன்ற இடைத் தேர்தல்களில் ஆளுங்கட்சியினர் கடுகளவுகூட சனநாயகப் பண்பினைப் பின்பற்றாமல் அதிகார பலம், பணபலம், குண்டர்கள் பலம் ஆகியவைகளைக் கட்டவிழ்த்துவிட்டனர். பண்டித நேருகூட தேர்தல் களத்தில் இறங்கி சவால் விட்டாரென்றால் மற்றவர்களைப்பற்றி சொல்லவும் வேண்டுமோ !

பாராளுமன்றமாகட்டும், சட்டமன்றங்களாகட்டும், இடைத் தேர்தலில் ஒன்றிரண்டு இடங்களை எதிர்க்கட்சிகள் பெற்றுவிடுவதால், நேரு சர்க்காரோ அல்லது மாநில சர்க்கார்களோ குப்புறக் கவிழ்ந்துவிடப் போவதில்லை. எனவே இடைத் தேர்தலில் ஆளுங்கட்சி ஒதுங்கியிருந்து, நாட்டை எதிர்நோக்கியுள்ள முக்கிய பணியில் ஈடுபட்டு, மற்ற கட்சிகள் போட்டி போட்டுக் கொள்ளட்டும் என்று பெருந்தன்மையுடன் இருந்திருக்கலாம். அத்தகு மனவளம் நேருவுக்கே ஏற்படாதது வருந்தத்தக்கதாகும். இந்தப் போக்கினால் சாதாரணமாக நடந்துமுடிந்திருக்க வேண்டிய இடைத் தேர்தல்களை முக்கியத்துவம் உடையதாக ஆக்கி படுதோல்வி கண்டதுதான் மிச்சம் !

காங்கிரஸ் மேலிடத்தாரும், மாநில அமைச்சர்களும் இந்த இடைத் தேர்தலில் நடந்துகொண்ட தன்மையை நடுநிலையிலிருந்து ஆராயும் எவரும், நேருவும், சம்பந்தப்பட்ட அந்தந்த மாநில முதலமைச்சர்களும் பதவியிலிருந்து விலகவேண்டும் என்று மக்கள் குரலெழுப்புவதை தவறு என்று கூறிடமுடியாது.

என்றாலும், அறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துக் கூறியிருப்பதைப்போல பண்டித நேருவோ, அல்லது மாநில முதலமைச்சர்களோ பதவியிலிருந்து விலகுவதற்குப் பதிலாக தங்களது ஆட்சிமுறையினால் நாட்டில் வளர்ந்துள்ள தீமைகளை ஏழை—நடுத்தர மக்கள் படும் தொல்லைகளை—இந்தித் திணிப்பு போன்ற அநீதமான நடவடிக்கைகளை திருத்திக்கொண்டு எதிர்க்கட்சிகள் கூறும் அறிவுரைகளை எண்ணிக்கை பலத்தைக் கொண்டு மட்டும் ஆராய்ந்து பார்க்காமல், அரசியல் அனுபவத்துடனும் விவேகத்துடனும் அணுகி சிந்தித்து ஆவனசெய்ய முன்வர வேண்டும்.

பண்டித நேருவை பழிதீர்த்துக்கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தில் நேரு தமது பதவியிலிருந்து விலகவேண்டும் என்று அறிஞர் அண்ணா அவர்களோ கழகமோ குரலெழுப்ப விரும்பவில்லை. ஆனால் இந்த பெருந்தன்மையை மிகச்சாதாரணமாக எண்ணி நேரு சர்க்காரோ அல்லது மாநில சர்க்காரோ தொடர்ந்து எதேச்சாதிகாரமாக நடப்பார்களானால், மிக விரைவில் காங்கிரஸ் ஆட்சி தனக்குத்தானே அழிவைத் தேடிக்கொள்வதிலிருந்து யாரும் காப்பாற்ற முடியாது.

ஆதலின், இடைத்தேர்தல்கள் தந்துள்ள மகத்தான பாடத்தை மதிப்பிற்குரிய பண்டித நேருவாகிலும் ஆரஅமர சிந்தித்து அதன் வழி நடப்பார் என்று நம்புகிறோம்.

○

## அண்ணாவுடன் நான் !

அசிரியர் என். வி. என். அளித்துவரும் "அண்ணாவுடன் நான்' கட்டுரை விருந்து அடுத்த வாரத்திலிருந்து தொடர்ந்து வெளிவரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—நிர்வாகி : 'திராவிடன்'

## மணவழகர் மன்றம்

"தேன் மலர்" குழந்தைப் பாடல்கள் தொகுப்பினை எழுதிய கவிஞர் திரு. தி. குமாரராசு அவர்கட்குப் பாராட்டு விழா ஒன்று 14-7-63 ஞாயிறு மாலை 5-30 மணியளவில் மன்றத் தலைமை நிலையம் 25-வது வட்டம் முருகேச முதலி வீதி (சிவஞானம் பூங்கா) 2-ம் எண்ணுள்ள மாடியில் வழக்கறிஞர் பு. ரா. கோகுல கிருஷ்ணன் B.A B L Dip(Econ) அவர்களின் சீரிய தலைமையில் நடைபெறும்.

**பாராட்டுரை வழங்குவோர் :**

திருவாளர்கள். பேராசிரியர் மா. இளஞ்செழியன் எம்.ஏ, புலவர் தணிகை உலகநாதன், கவிஞர் சுரதா, (ஆசிரியர், ஊர்வலம்) கவிஞர் கா. வேழவேந்தன் பி.ஏ. பி.எல். கவிஞர் தெசினி பி.காம் (ஆனர்ஸ்) ஆசிரியர் 'கவிதை' கவிஞர் தமிழோவியன் எம்.ஏ., கவிஞர் ந. இறைவன் பி.ஏ., வழக்கறிஞர் மு. சென்னியப்பன் எம்.ஏ.பி.எல்., அ. செ. சண்முக சுந்தரம் எம்ஏ.எல்.டி., ஆ. ம. இராமச்சந்திரன் பி.எஸ்.சி.

## அண்ணா இலக்கிய மன்றம்

•

**திருவண்ணாமலை வெற்றி விழா**

17-7-63 புதன் மாலை 6-30 மணிக்கு, வில்லிவாக்கம் பெருமாள் கோவில் மண்டபத்தில் திரு. ஆ. பலராமன் தலைமையில் திரு. ஆ. க. அ. அப்துஸ்சமத் எம். ஏ., திரு. டி. கே. பொன்னுவேலு பி.ஏ., திரு. என்.வி.என். சோமு பி. ஏ., கவிஞர் கா. வேழவேந்தன் பி.ஏ.பி.எல்., மாணவி சற்குணம் (பி.ஏ.) மற்றும் பலர் பேசுவர்.

# திருவண்ணாமலை படிப்பினையை அலட்சியப்படுத்தாதீர்!

அன்புள்ள தலைவரவர்களே, அருமை அண்ணா அவர்களே, தாய்மார்களே, தோழர்களே! இப்பாராட்டுக் கூட்டத்தில் நான் கலந்து கொள்ளும் வாய்ப்பினைப் பெற்றமைக்கு மகிழ்ச்சியடைகின்றேன். மிக உற்சாகத்துடனும், அலங்காரத்துடனும் நடைபெற வேண்டிய இக்கூட்டம் சர்க்காரின் அடக்குமுறை நடவடிக்கைகளால் இங்கே அஞ்சி அடங்கி வீற்றுள்ள பல்லாயிரக் கணக்கான உங்களிடத்தில் உற்சாகம் காணப்படவில்லை யென்று எனக்கு முன் பேசிய தோழர்கள் தெரிவித்தார்கள்.

திருவண்ணாமலைத் தேர்தலில் கழகம் பெற்ற மகத்தான வெற்றி மந்திர சக்தியாலோ மாகாளி பூசையாலோ அல்லது எந்த ஒரு சதித் திட்டத்தாலோ பெற்றதல்ல. ஜனநாயக முறையுடன் இன்னும் சொல்லப் போனால் ஆளுங் கட்சியின் அட்டூழியங்கள், அதிகார பலம், பண பலம் உள்ளிட்ட பல கொடுமைகளை எதிர்த்துப் பெற்ற சனநாயக வெற்றியாகும். அவ்விதம் பெற்ற வெற்றியைக் கொண்டாட ஆளுங் கட்சி குறுக்கே நிற்கிறது என்றால் இதைவிட எதேச்சாதிகாரமான செயல் வேறு யிருக்க முடியுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்குமாறு பொதுமக்களையும் நேர்மை உள்ளம் படைத்த காங்கிரஸ் தோழர்கள் இருந்தால் அவர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

இதேபோல காங்கிரஸ் வெற்றி பெற்றிருந்தால் அக்கட்சியினர், கழகம் காட்டும் அளவுக்குப் பெருந்தன்மையையும், பொறுமையையும் காட்டியிருப்பார்களா என்பதையும் காங்கிரஸ் தோழர்களும் குறிப்பாக ஆட்சி பீடத்திலிருப்பவர்களும் மன உணர்வுடன் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன். தங்களுக்கு ஒரு நீதி மாற்றாருக்கு என்றால் மாறுபட்ட நீதியா? இவ்வித அநீதி எத்தனை காலத்துக்குச் செல்லுபடியாக முடியும்? கழகத்தின் மீது ஆளுங் கட்சி பொறாமை கொண்டு முறை தவறி நடந்ததும் இத்தொகுதியில் கழகம் வெற்றி பெற்றதற்கு ஒரு காரணமாகும். எனவே தேர்தல் முடிந்த பிறகும் ஆளுங் கட்சியினர் முறை தவறி நடப்பதால், அது கழகத்திற்குத்தான் மேலும் பொதுமக்களின் ஆதரவையும் அனுதாபத்தையும் திரட்டித் தருமேயன்றி ஆளுங் கட்சிக்கு எவ்வித பயனும் ஏற்படப் போவதில்லை.

மேலைய நாடுகளில் இது போன்ற தேர்தல்கள் நடந்து முடிந்ததும், தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள் கட்சித் தலைவர்கள் வெற்றி பெற்றவரைப் பாராட்டுவதும், தேர்தல் கால விவகாரங்களை மறந்து வெற்றி பெற்றவரை வரவேற்பதையும் நாம் காண்கிறோம். ஆனால் நமது நாட்டிலேயோ, தேர்தலில் ஈடுபடும் கட்சிகள் ஒன்றுக்கொன்று கொடிய விரோதிகள் போல இருப்பது கண்டு மிகவும் வேதனைப் படுகிறேன்.

அறிஞர் அண்ணா அவர்கள் தமிழக அரசியல் துறையில் ஏற்படுத்தியுள்ள பண்பை கழகத் தோழர்கள் மட்டுமல்லாமல் தமிழகமே நன்கு அறியும். அரசியல் வேறுபாடுகளுக்காக மாற்றுக் கட்சியினரை மனதாலும் விரோதிகளாகக் கருதாமல், நட்புரிமையுடன் பழகி வருபராவார்கள். எனவே இத்தேர்தலில் கழகம் வெற்றி பெற்றுவிட்டதென்றால் நாங்கள் தலைகனம் கொண்டு துள்ளிக் குதிப்பவர்களல்ல என்பதை அண்ணா அவர்கள் கோவையில் நடைபெற்ற வெற்றி விழாக் கூட்டத்தில் எடுத்துக் காட்டியிருப்பதை நான் இக் கூட்டத்தில் கழகத் தோழர்களுக்கும், மாற்றுக் கட்சியினருக்கும் நினைவூட்ட விரும்புகிறேன்.

எனவே இன்றுவரை நடைபெற்ற சம்பவங்களை இரு சாரினரும் மறந்து இத்தொகுதியில் அமைதி நிலவவும், அனைவரும் எப்போதும் போல பழகவும், தேர்தல் குரோதங்களை யெல்லாம் விட்டுக் கொடுத்தும், நடக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்’

தேர்தல் முடிந்த பிறகு வெற்றி பெற்றவர் அத்தொகுதியின் எல்லோருக்கும் பிரதிநிதியாவார். அதைப்போல தோழர் ப. உ. சண்முகம் அவர்களை இத்தொகுதியின் பிரதிநிதி என்ற முறையில் காங்கிரஸ் தோழர்களும் மனமார வரவேற்றுத் தொகுதியின் முன்னேற்றத்திற்காகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுகிறேன்.

இத்தேர்தலில் கழகம் வெற்றி பெற்றதென்றால் அதைக்கண்டு நாங்கள் தலைகால் தெரியாமல் குதிக்க மாட்டோம். தேர்தல் என்றால் வெற்றி தோல்வி என்பது இயற்கையேயாகும். ஆனால் ஆளுங்கட்சி இடைத் தேர்தலில் தோல்வி யுறுகிறதென்றால் அதில் அடங்கியுள்ள அரசியல் உண்மைகளை, விளக்கங்களை, மக்கள் தரும் தீர்ப்பை, ஆளுங் கட்சியினர் உணர்ந்து திருந்த வேண்டும். அதற்குப் பதிலாக வெற்றி பெற்ற கட்சியின் மீது காய்ந்துவிழுவது விவேகமாகாது.

கடந்த பொதுத் தேர்தலுக்குப் பிறகு தமிழகத்தில் நடைபெற்ற திருச்செங்கோடு பாராளுமன்ற இடைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கும் கழகத்திற்கும் நேரடி போட்டி நடந்தது. அதில் கழகம் வெற்றி பெற்றது. அடுத்தபடியாக திருவண்ணாமலை சட்டமன்ற இடைத்தேர்தலில் காங்கிரசும்— கழகமும் நேரடிப் போட்டியில் நின்றது. இதிலும் கழகம் வென்றது. இந்த இரு வெற்றிகளையும் எவ்வளவு தொல்லைகளுக்கிடையே ஜனநாயக விரோத சக்திகளையெல்லாம் எதிர்த்து நின்று கழகம் வெற்றி பெற்றிருக்கிறதென்பதை நாடே அறிந்ததாகும்.

எனவே பொதுத் தேர்தலுக்குப் பிறகு காங்கிரஸ் மக்களின் நம்பிக்கையை இழந்து வருவதையும் அதே சமயத்தில் கழகம் மக்களின் நம்பிக்கைக்கு மேலும் மேலும் உரித்தானதாகி வருவதையும் உணரவேண்டும்.

அதேபோல காங்கிரசுக்குத் துணையாக நின்ற எதிர்க் கட்சிகள் குறிப்படபாக கம்யூனிஸ்ட் கட்சி தனது தவறான போக்கிலிருந்து திருந்த வேண்டும். இன்றில்லாவிட்டாலும் நாளை கம்யூனிஸ்ட் கட்சியை அழித் தொழிக்கப் போவது காங்கிரஸ் கட்சி தான். அப்பொழுது கம்யூனிஸ்ட் கட்சிக்கு அனுதாபப்படப் போவது அறிஞர் அண்ணா அவர்களும், கழகமுமே தவிர வேறு கட்சிகளல்ல.

கழகத்தின் வளர்ச்சி கண்டு பொச்சரிப்பு கொண்டு கம்யூனிஸ்ட் கட்சி காங்கிரசுக்குத் துணை போவது தனக்குத்தானே அழிவைத் தேடிக் கொள்வதாகும். இந்த உண்மையை இன்று கம்யூனிஸ்டுகள் அலட்சியப் படுத்தலாம். ஆனால் எதிர்காலத்தில் அவர்கள் தங்களின் இத்தவறுக்கு வருந்தப்போவதை நாடு காணத்தான் போகிறது. காங்கிரசின் அதிகார பலம், பண பலம், ஜனநாயக விரோதமான நடவடிக்கைகள் இவ்வளவும் போதாதென்று கம்யூனிஸ் கட்சி, திராவிட கழகம், தமிழ் தேசிய கட்சி, தமிழரசுக் கழகம் ஆகிய கட்சிகளும் சேர்ந்து எதிர்த்துங் கூட கழகத்தை அசைக்க முடியவில்லையென்றால், அதன் சக்தியும், கொள்கையும், தலைமையின் தூய்மையும் எப்பேர்ப்பட்டது என்பதை அக்கட்சிகள் உணர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வித அரசியல் வரலாற்றுச் சிறப்புக்குரிய வெற்றியைக் கழகம் பெற்றதென்றால் அதற்குக் காரணம், அறிஞர் அண்ணா அவர்களின் அறிவாற்றலும், அரசியல் பண்பும், தேர்தல் பணியில் கலந்து கொண்ட கழகத் தோழர்கள் ஒவ்வொருவரின் உண்மையான உழைப்புமாகும். எங்கள் கட்சியைப்பற்றி நானே பெருமையாகப் பேசிக்கொள்வதாக யாரும் கருதக்கூடாது.

இன்று வெளிவந்த ‘இந்து’ இதழில், திருவண்ணாமலைத் தேர்தல் முடிவுபற்றி “விமர்சனம்” செய்யப்பட்டிருக்கிறது. அதில், முதலமைச்சர் காமராசர், கடந்த ஒரு மாதத்திற்கு முன்பிருந்தே வோட்டுகள் எண்ணி முடியும் நாள் வரை திருவண்ணாமலைத் தொகுதியில் முகாமிட்டு சுற்றுப் பயணம் செய்தும் மற்றும் பல வேலைகளிலும் ஈடுபட்டார் என்

(8-ம் பக்கம் பார்க்க)

## ஆளுங்கட்சிக்குத் துணைபோன எதிர்க்கட்சிகளே இன்றே திருந்தாவிட்டால் எதிர்காலத்தில் அழிவுதான்!

**வெற்றிவிழாக் கூட்டத்தில் என். வி. என். முழக்கம்!**

# திருவண்ணாமலை மக்கள் தீர்ப்பு

திரு — அண்ணா — மலை — திருவண்ணாமலை. ஆம்; திருவண்ணாமலை அண்ணா அவர்களுக்குரிய மலையாகவே ஆகிவிட்டது.

"தொல்லைகளுக்கு இடையில்தான் உண்மையான துணிவு பிறக்கும்" என்பது இரேக்னால்ட் என்பாரின் பொன்மொழி. தொல்லைகளுக்கு இறுதியில்தான் உறுதியாக மகிழ்வு கிட்டும்— என்பது மூதறிஞர்களின் நன்மொழி. கழகத்தின் கண்மணிகள் திருவண்ணாமலைத் தேர்தல் மூலம் இதை நிரூபித்து விட்டனர்.

தூய்மையான உளத்துடன்— தொண்டு புரிவதில் தி. மு. கழகத் தோழர்கள் யாருக்கும்—எக்கட்சியினருக்கும் சளைத்தவர்கள் அல்லர் என்பது ஏற்கனவே அறிந்தது தானென்றாலும்; பண பலம்—பதவி பலம் — வன்முறை இத்தனைக்கும் நடுவில் நின்று வெற்றி பெற்றிருப்பது எண்ணி இறும்பூதெய்வதற்குரியதாம். இந்த வெற்றி ஆளுங்கட்சிக்கோர் அதிர்ச்சி! ஆதிக்கக் கோட்டைக்கோர் தளர்ச்சி! ஒத்துப் பாடிய ஓதியமிலார்களுக்கு ஓர் வீழ்ச்சி!

கழகத்தின் வெற்றியினால் அனைவருமே மகிழ்ச்சியடைந்துள்ளனர், மண் மீது விழுந்தும் மீசையில் ஒட்டவில்லையெனும் தோல்வியை ஏணத்தவர்களைத் தவிர! நாமும் மகிழ்கிறோம்! மற்றொன்று எண்ணிக்கையில் கூடியதால் அல்ல; மதோன்மத்தர்களின் ஆட்சிக்கு இஃதோர் நல் லாப்பு; மக்களுக்குத் தொண்டு செய்ய கிடைத்திட்ட வாய்ப்பு!— என்பதால்!

இது தி. மு. கழகத்தின் மாபெரும் வெற்றி! — மக்களின் வெற்றி! மறுமலர்ச்சியை விழைவோர்தம் வெற்றி! தடைச் சட்டமதை உடைத்தெறிய தயார்— தயார் என துந்துபி முழங்கும் தங்கத் திராவிடத்தின் சிங்கம் நிகர்த்தவர்களின் வெற்றி! மொரார்சியை — அவர்தம் வரிக் கொள்கையினை ஆகாது, கூடாது என அடித்து முழங்கும் வெற்றி! அக்ரம வழியில் ஓட்டு சேகரிக்க முனைந்த பரிவாரங்களைப் பதற வைத்த வெற்றி!

மக்கள் சக்தியை அறியாது ஆர்ப்பரித்த மன்னாதி மன்னர்களெல்லாம் மண்ணைக் கவ்வினார்கள்; மாபெரும் சாம்ராச்சியங்கள் அழிந்தொழிந்து புல் முளைத்துப் போய்விட்டன — என்பதை அறியாதவர்கள் அறிந்து கொண்டு 'ஆட்ட'மதை நிறுத்தித் திருந்த வேண்டிய வெற்றி!

'பாஸ்டிலி' தூளானது; பதினாறும் லூயி தலை துண்டிக்கப்பட்டு இரத்த வெள்ளத்தில் மிதந்தான். கொடுங்கோலன் ஜார் ஒதுங்க தடங்காணாமல், ஒளிய இடங்காணாமல் திண்டாடினான்; ஜார்ஜ் மன்னன் ஒடுக்கப்பட்டவர்களின் ஒருமித்தக் குரலின் முன் செய்வதறியாது திகைத்தான்— இவைகளெல்லாம் எதேச்சாதிகாரத்திற்கு இறுதியிலே மக்கள் தந்த தீர்ப்புகளென தீட்டிக் காட்டப்பட்டுள்ளன வரலாற்று ஏடுகளில். வரை, முறையோடு இவைகளைப் படிக்காது, படித்தறிந்தோர் சொல்லையும் கேளாது 'எல்லாம் தெரியும் எவர்தான் தலையெடுப்பார் என் முன்னே' என இறுமாந்து பேசித் திரிந்த மாபெரும் பெரியாரின் இச்சைக்குகந்த பச்சைத் தமிழர் ஈரிருபது நாட்களுக்கும் மேலாக முகாமடித்து — முட்டி நோகச் சுற்றி—நாவரளக் கத்தி — கை வலிக்க 'கிடைத்த'தை அள்ளி வீசியதற்குப் பின்பும் கிடைத்த ஜனநாயக வெற்றி!

ஒன்றுக்கொன்று முரண்பட்ட கொள்கையுடைய தாயினும்கூட

### பெங்களூர் ப. இளவழகன்

தேர்தல் காலங்களில் எதிர்க்கட்சிகள் ஒன்றாக இணைந்துதான் பெரும்பாலும் ஆளுங்கட்சியை எதிர்க்கும்—என்பது இதுவரை நிலவி வந்த முறை. பற்பல பெயர்களில் பிரிந்து கிடக்கும் 'குட்டிக் காங்கிரசு, 'ஆளில்லாத சிவஞானம் கட்சி' குழப்பக் கொள்கையினை அடிக்கடி 'ரிலீஸ்' செய்யும் கம்யூனிஸ்ட் கட்சி, அய்யாவுடைய இரண்டுங் கெட்டான் கட்சி ஆகிய அத்தனையும் ஒன்றாய் நின்று கச்சை கட்டி, 'ஓகோ'வென உரத்தக் குரலில் முகாரி பாடியும் கூட தி. மு. கழகம் வெற்றி பெற்றிருக்கிறதென்றால் கழகக் கொள்கையில் மக்கள் கொண்டிருக்கிற அசைக்க முடியாத நம்பிக்கையும்; கழகத்தின் வளர்ச்சியில் கொண்டிருக்கிற ஆர்வமுமே காரணங்களாகும்.

62-ம் ஆண்டு பொதுத் தேர்தலுக்குப் பின் இந்தியாவே எதிர் பார்த்த இரண்டு முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல்கள் தமிழகத்துத் தேர்தல்கள்தான். ஒன்று திருச்செங்கோடு, அடுத்தது திருவண்ணாமலை. ஏனெனில் இங்கேதான் ஆளுங்கட்சிக்கும், அதன் அடுத்தக் கட்சியான தி. மு. கழகத்திற்கும் நேரடிப் போட்டி நிகழ்ந்தது. திருச்செங்கோடு காங்கிரசின் மேலிடத்திற்கு தலைவலியானதென்றால், திருவண்ணாமலை கீழிடத்துக் காங்கிரசிற்கு வயிற்று வலியாகி விட்டது. எனவேதான் 'கமிட்டி' கூட்டுகின்றனர். காரணத்தை ஆராய்கின்றனர். ஆராய்ந்து கொள்ளட்டும் அதிலொன்றும் நமக்கு நட்டமில்லை; நாடு பெறப்போகும் பயனுமில்லை.

ஆனால் அந்தக் காரணங்கள் எப்படி இருக்கும் என்பது ஏற்கனவே நாமறிந்ததுதான். சினிமா நடிகர்களைக் காட்டி வென்றோமென்பது, இவர்கள் தோல்வியைத் தழுவிக் கொண்டதற்குக் கட்டுகின்ற சப்பைக் கட்டேயன்றி வேறொன்றுமல்ல.

சினிமாவை வெறுப்பது போன்றும், சினிமா நடிகர்கள் தீண்டத் தகாதவர்கள் போன்றும், சினிமா நடிகர்கள் தொடர்பே அற்றக் கட்சியினரைப் போன்றும் சினிமா நடிகர்களைக் காட்டிப் பெற்ற வெற்றியென்கிறார்கள். சிந்திக்கும் ஆற்றலை இழந்தவர் போல்! 'பால் ரூம் டேன்ஸ்' உடையில் ஒரு வேளையும் பழுத்த சிவப்பழம் உடையில் மற்றொரு வேளையும், பண்பட்ட மேதை போன்ற உடையில் இன்னொரு வேளையும், கதருடையில் பிறிதொரு வேளையுமாக வாழ்க்கையிலே நடிக்கும் பிரபல நடிகர் இருப்பதே உங்கள் கட்சியில் தானே! இல்லையென்று உதறி விடத் தயாரா? கடந்த தேர்தலில் அவர் பிரச்சாரம் கூட செய்தாரே!

62-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் கிருபளானியை எதிர்த்து மேனன் போட்டியிட்ட பொழுது, அவருக்கு, ஆளுங் கட்சியான காங்கிரசுக்கு ஆதரவாக ராஜ் கபூர்—திலிப்குமார், பிரிதிவிராஜ் உட்பட வட இந்திய பிரபல நட்சத்திரங்கள்—நடிகைகள் உட்படச் சென்று ஓட்டு கேட்டார்களே; மேனன் வெற்றிக்கு அவர்கள்தான் காரணமென்று ஒப்புக் கொள்ளத் தயாரா? அப்படித் தயாரென்றால் அதே கிருபளானியை எதிர்த்து நடந்த இடைத் தேர்தலில் அந்த சினிமா நட்சத்திரங்கள் துணை வந்த போதும் தோல்வியைத் தழுவிக் கொண்டதே காங்கிரசு, காரணமென்ன? கண்ணியமிருந்தால் பதில் கூறுங்கள்!

பச்சோந்திகளைப் போல் நாளுக்கொரு பேச்சும், வேளைக்கொரு கொள்கையுமாக பேசித்திரிவதுதான் பாரத புத்திரர்களுக்குரிய இலட்சணமோ? "சத்தியமேவ ஜெயதே" என்று வாய்ப்பறை கொட்டுபவர்களே! விவேகத்துடன் பதில் கூறுங்கள் பார்ப்போம்.

"அவசரக்காரனுக்கு புத்தி மட்டு" என்பார்கள். 1657 பொதுத்தேர்தலில், குளித்தலைத் தொகுதியில், பஞ்சாண்டுத்திட்ட வீரர்கள் நமது கலைஞர் கருணாநிதியை ஏளனம் செய்யும் முறையில் "கருணாநிதி தம்பி, குளித்தலையை நம்பி, விடப்போறார் கம்பி" என்று சுவரொட்டி ஒட்டினார்களாம். கலைஞர் வென்றார். கழகக் கண்மணிகள், அந்தக் கருத்துக்குருடர்கள் புத்தி பெறும் வண்ணம் அந்தச் சுவரொட்டிகளுக்குப் பக்கத்திலேயே 'கருணாநிதித் தம்பி, குளித்தலையை நம்பி, அடைந்துவிட்டார் வெற்றி! எங்கே உன் நெற்றி?' என்று எழுதி ஒட்டினார்கள். அந்த வாலறுந்ததுகளின் வாரிசுகள், "போடியும் போச்சுதடா" என்று இராசாசி சொல்ல, "நாங்குனேரி நழுவியதடா" என்று நமதருமை அறிஞர்அண்ணா சொல்வதாகவும் "அண்ணாமலைக்கு அரோகரா" என்று பொதுமக்கள் இரைவதாகவும் திருவண்ணாமலையில் மீண்டும் எழுதி ஒட்டின.

"போடி போனதென்று
[புலம்பியதாரடா?
நாங்குனேரி நிலையையெண்ணி
[நடுங்கியதாரடா?
திருவண்ணாமலை காங்கிரசுக்கு
கல்லறையாச்சுதடா!
திருந்தாவிடில் அழிவுதான்
[அறிந்துகொள்ளடா!"

—என்று பதிலுக்கு எழுதிக் காட்ட எண்ணிறந்தோர் இங்குண்டு என்பதை நினைவுபடுத்தி, திருவண்ணாமலை மக்கள் தந்த 'தோல்வி முக்காடை'ப் பூண்டு மூலையில் முடங்குவதே நன்றென்று அறிவிக்க ஆசைப்படுகிறோம்.

ஆளுங்கட்சியாக இருந்தும்; ஆபாசச் சுவரொட்டிகள் மூலம்— அநியாய வழிகள் மூலம்-பச்சை நோட்டுக்களைத் திணித்தும்கூட 1475 வாக்குகளை அதிகமாகப் பெற்று வென்றிருக்கிறோமென்றால், மக்களுக்கு ஆற்றவேண்டிய கடமையை மறந்துவிட்டு, கழகத்தை அழிக்கத் துடிக்கும் காங்கிரசுக்கு மீண்டும் ஒரு எச்சரிக்கையும், அறிவுறுத்தலும் விட்டிருக்கின்றார்கள் என்றே பொருளாகும்.

அதற்கேற்ப காங்கிரஸ் ஆட்சியினர் இனியாகிலும் தங்களின் தவறுகளைத் திருத்திக் கொண்டு செயலாற்ற முன்வரவேண்டும்.

இல்லையெனில் 1967-ல் காங்கிரஸ் எதிர்க்கட்சியாகவும், கழகம் ஆட்சிபீடத்தில் அமர்ந்து நல் அரசோச்சும் கட்சியாகவும் மாறப் போவது உறுதி! உறுதி! உறுதி!

# காங்கிரசுக்கு ஓர் புதைகுழி!

# "வெற்றியின் விளிம்பிலே !"

சி. துரைச்செல்வம்

•

மனிதனை அழிக்க முடியும்! ஆனால் வெல்ல முடியாது! என்றான் ஹெமிங்வே!

திராவிட முன்னேற்றக் கழகத்தை அழிக்கமுடியலாம் ஆனால் அதன் வலிமைமிகு கொள்கையை, விடுதலை பெற்றே தீருவோம் என்ற வேட்கையை யாரும் அழித்துவிட முடியாது. அப்படி அழித்துவிட முடியும்; இயலும்! என்று யாராவது கருதினால்... அவர்கள் பைத்தியக்காரர்களாக இருக்கவேண்டும். அல்லது உலக சரித்திரத்தின் 'அரிச்சுவடியை' அறியாத மண்டுகங்களாக இருக்கவேண்டும்.

தென்னாட்டின் விடுதலை இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகம், திருவண்ணாமலையிலே வெற்றிவாகை சூடி, தனது வெற்றியை எட்டுத்திக்கும் பரப்பி மகிழ்ந்து கொண்டிருக்கிற இந்த நேரத்திலே, —அசகாயச் சூரர்! அமைச்சர் பக்தவத்சலனார் சொல்லுகிறார்:-

**திருவண்ணாமலை தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றி அது கொண்டிருக்கும் பிரிவினை கொள்கைக்கு கிடைத்த வெற்றி! என்று அண்ணாதுரை சொல்வது தவறு.**

'திருவண்ணாமலை இடைத்தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகம் தன் பிரிவினைக் கொள்கையை ஒரு சிக்கலாக வைத்துப் போட்டியிட்டதாக தெரியவில்லை. தேர்தல் பிரச்சாரத்தின் போதும், பிரிவினை கொள்கையைப் பற்றிப் பேசவில்லை! ஆனால் வெற்றி பெற்றதும், பிரிவினை கோரிக்கைக்கு கிடைத்த வெற்றி என்று சொல்லுகிறார்கள்! பிரிவினைக்கு வெற்றி என்று கூறும் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பிரிவினை கொள்கையை தொடர்ந்து பின்பற்றட்டும். பின்னர் என்ன செய்வது என்பதை அரசு கவனித்துக்கொள்ளும்'. என்று கூறி ஆறுதல் அடைந்திருக்கிறார்.

பாவம் பக்தவத்சலனார்! அமரிக்காவிற்கு சென்று அலுத்துக் களைத்து வந்தவர் அல்லவா? எனவேதான் அவர் இவ்வாறு கதறி இருக்கிறார்.

ஒருவேளை! நாம் அமெரிக்கா செல்லும்போது, திருவண்ணாமலை சென்று, அன்பர்களே! நண்பர்களே! பக்தகோடிகளே! பணக்காரர்களே! எங்கள் பத்ராசலம் பிள்ளையை காப்பாற்றுங்கள் என்று கேட்டுவிட்டுச் சென்றோமே! இங்கு திரும்பிவந்து பார்த்தால் ப. உ. சண்முகம் அல்லவா வெற்றிப் பல்லக்கில் பவனி வருகிறார்.

அய்யய்யோ! உபதேர்தலிலே! அதிலும் சென்ற தடவை வென்ற தொகுதியிலே காங்கிரசுக்கு 'கல்லறை'யா? இனி எப்படி மக்கள் முகத்தில் விழிப்பது! என்ற பயத்தால் ஏற்பட்ட ஜுரத்தாலும் அவர் முணுமுணுத்து இருக்கலாம்.

திராவிட முன்னேற்றக் கழகம் அதன் பிரிவினை கொள்கையை திருவண்ணாமலையிலே வற்புறுத்தவில்லையாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிப்படை கொள்கையே 'திராவிடநாடு' வடநாட்டு ஏகாதிபத்தியர்களின்'பிடியிலிருந்து விடுதலை அடையவேண்டும் என்பது தானே.

எங்கள் பத்தரைமாற்றுத் தங்கம்! பத்ராச்சலத்தை வென்ற சிங்கம்! ப. உ. சண்முகம், வேட்பாளர் மனு தாக்கல் செய்கின்ற போழ்து நான் ஒரு திராவிட முன்னேற்றக்கழகக்காரன்; என்று தானே விண்ணப்பித்துக்கொண்டார்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரிவினைக் கொள்கையை வற்புறுத்த மாட்டேன்! என்று திரு. சண்முகம் அவர்களோ, அல்லது அவர் சார்ந்துள்ள இயக்கமோ, எப்போதாவது-எங்காவது சொல்லி இருக்கிறதா?

எங்கே பதில்...?

பாவம்! பதில் சொல்லும் ஆற்றலும்—திறனும் உங்களுக்கேது. வேண்டுமானால் உங்கள் நவக்கிரகங்களோடு சேர்த்து பஜனை பாடலாம்! ஆண்டுவிட்டால் மட்டும் போதுமா அறிவு வேண்டாமா!

பூ—நாரிலே தொடுக்கப்படுகின்றபோது, பூவால் நாரும் பெருமை அடைவதுபோல, திராவிடத்தலைவன்! தென்னகச் சுடர் ஒளி, தீந்தமிழ் மேதை, தேனொழுகும் சொல்வல்லோன், அறிஞர் அண்ணா அவர்களின் கருத்தை மறுத்துச் சொல்வதின் மூலம் தன்னையும், விளம்பரபடுத்திக் கொள்ள முயற்சி செய்கிறார் திரு பக்தவத்சலனார்.

பக்தன் சில சமயங்களிலே, தன்னையே பரமனாக கருதிக் கொள்ளுவதும் உண்டு. ஆனால் பக்தன் எத்தனைக் காவடிகள் எடுத்து பரமனுக்கு செலுத்தினாலும், பரமனைப்போல் நடிக்க முடியுமே தவிர பரமனாகிவிட முடியாது.

அதுபோலத்தான் பக்தவத்சலமும்! இவர் எத்தனை முறைதான் காவடி எடுத்து தில்லி சர்க்கார் பாதத்தை அபிசேகித்தாலும், இவர் அங்குள்ள நேருபெருமான் ஆகமுடியாது!

நேருவானால்தான் என்ன? அந்த ஆசியாவின் ஜோதி, சுடர் ஒளிதான் இப்போது அடித்த ஆட்சிமொழி காற்றிலேயே ஆடிக் கொண்டு இருக்கிறதே! அடுத்து வரும் காற்றில் என்னவாகுமோ? யார் கண்டார்கள்.

மக்கள் மகேசனை வணங்கி பூசை செய்து வழிபட்டு மதிக்கின்றவரைதான் மகேசன் மக்கள் மத்தியில் மதிப்புடன் இருக்க முடியும். மக்கள் நமக்கு மகேசன் தேவை இல்லை என்று கருதிவிட்டால்? மறு விநாடியே மகேசன் மதிப்பற்று தூக்கி எரியப்படுவான்.

சனநாயகத்தில், மக்களாட்சியும் அதுபோன்றதுதான். "மக்கள் விரும்புகின்றவரைதான், தில்லி சர்க்கார் திராவிடத்தோரை ஆளமுடியும்—அடிமைகளாக நடத்த முடியும்.

ஆனால் மக்கள், தங்களது ஆட்சியிலே மாற்றம் செய்ய வேண்டும், தில்லி ஏகாதிபத்தியத்தை அகற்றவேண்டும் என்று கருதினால்? அடுத்த விநாடியே, மகேசனுக்கு ஏற்படும் கதிதான் அரசாங்கத்திற்கும் ஏற்படும்.

இதை அறியாத அமைச்சர் சொல்லுகிறார்; 'பிரிவினையை வற்புறுத்தட்டும்! பின் அரசாங்கம் கவனித்துக் கொள்ளும்!' என்று.

இவ்வளவு நாள் இல்லாத கவனம் இப்போதுதான் உங்கள் அரசாங்கத்திற்கு வந்ததா?

மிக்கமகிழ்ச்சி! என்ன செய்யப் போகிறீர்கள்...?

விலைவாசி குறைப்பு போராட்டத்தின்போது, உங்கள் தானைத் தலைவர், தவப்புதல்வர்! ஈரோட்டார் புகழும் பச்சை தமிழர்! திரு. காமராச சக்ரவர்த்தி இப்படித்தான் சொன்னார். அந்த கவனத்தின் காரணமாகத்தான் மதுரையிலே பொற்செழியனையும், சென்னையிலே கோ. சு. மணியையும் கவனித்துக கொண்டீர்கள். ஆனால் உங்களை மக்கள், திருச்செங்கோட்டிலே கவனித்துவிட்டதையும் நீங்கள் கவனப்படுத்திக்கொள்ளவேண்டும்.

ஒரு நாட்டின் விடுதலை, மேடைப் பேச்சாலும், ஆர்பாட்டம், ஊர்வலம் இவைகளால் மட்டும் வாங்கிவிடக் கூடியதன்று.

ஒரு நாட்டின் விடுதலை, அந்த நாட்டிற்காக உயிரையும் தியாகம் செய்ய தயங்காதவர்களின், எண்ணிக்கையை கொண்டு அமைவதாகும்.

அந்த நாட்டுச் சரித்திரம், நாட்டிற்காக தியாகம் செய்தவர்களின் செந்நீராலும் கண்ணீராலுமே எழுதப்படவேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகம் என்று தன் விடுதலை கீதத்தை இசைக்கத் தொடங்கியதோ, அன்றே தன்னை அந்த நிலைக்கு ஆட்படுத்திக்கொண்டு, இன்னும் அதன் சக்தியைப் பெருக்கிக் கொண்டுவந்துள்ளது.

ஒரு நாட்டின் விடுதலைக்கு தர வேண்டிய 'களபலி'யைகொடுக்க தன்னை முழுதும் தயார் செய்து கொண்டுவிட்டதை — விலைவாசி குறைப்பு போரிலேயே, இரண்டு இளஞ்சிங்கங்களை பலி கொடுத்து எண்ணற்ற வீரர்களை சிறைக்கனுப்பி, ஆட்சியாளருக்கு அறிவித்துவிட்டது.

இன்னும் எத்தனை பிணம் வேண்டும்? அத்தனையும் தருவோம்! எழிலார் திராவிடத்தை மீட்டு இன்பமுடன் வாழ்வோம்! என்று பரணிபாடும் ஐந்து இலட்சம் உறுப்பினர்களையும், அவர்களுக்கு துணையாக முப்பத்தினாலு இலட்சம் வாக்காளர்களையும் கொண்டு தன்னை தயார் செய்து கொண்டுள்ளது, திராவிட முன்னேற்றக் கழகம்.

ஆம்! ,திராவிட முன்னேற்றக் கழகம் தன் நாட்டு விடுதலை போரை துவக்க முழுதும் தன்னை தயார் செய்து கொண்டுவிட்டது. தீரமிகு வீரன், தென்னகத்து தீரன் அறிஞர் அண்ணா தலைமையிலே, விடுதலைப் போரை துவக்கி வெற்றிவாடை சூட, இன்று 'வெற்றியின் விளிம்பிலே' நின்று கொண்டிருக்கிறது. அதன் முடிவு?-வெற்றிதான்! ஐயமில்லை! எழுந்திட்ட இம் முயற்சியை இனி இகழ்ந்திட்டால்ஏதும் ஆகுமோ?

வாழ்க அண்ணா!

வெல்க திராவிடம்!


**'திராவிடன்'**

**சந்தா விவரம்**

—(0)—

| | | |
|---|---|---|
| ஓராண்டு | ... | ரூ. 8. |
| ஆறு மாதம் | ... | ரூ. 4. |
| தனிப்பிரதி | ... | 16 காசு. |

# அரசியல் ஆணவத்தை முறியடிக்க முனைந்த முதல் சக்தி தி. மு. க.!

## பிரிவினைக் கொள்கையை அழிக்க முடியாது

"திருவண்ணாமலையில் பெற்ற வெற்றி தி. மு. கழகத்திற்கு மட்டும் கிடைத்த வெற்றியல்ல—காங்கிரசு எதேச்சாதிகாரத்தை வீழ்த்திய ஜனநாயகத்தின் வெற்றியாகும். இதை உணராதவர்கள் அரசியல்வாதிகளுமல்ல—சனநாயகவாதிகளும் ஆகமாட்டார்கள்.

"எத்தனை அரசியல் கட்சிகள் போட்டியிட்டாலும், ஆளுங்காங்கிரசுக் கட்சியை வீழ்த்த முடியாது என்ற அரசியல் பிடிவாதத்தை—அரசியல் குருட்டு நம்பிக்கையை—அரசியல் வைதீகத்தைத் தடுத்து நிறுத்தி முறியடித்த முதல் கட்சி திராவிட முன்னேற்றக் கழகம் ஆகும்."

சென்ற ஓராண்டுக்கு முன்புவரை தமிழகச் சட்டமன்றத்தில் இருந்த நண்பர் சண்முகம் அவர்கள், சென்ற தேர்தலிலே, தொகுதியில் நடந்த சில கோளாறு காரணமாகச் சட்டமன்றம் செல்ல முடியாமல் தடுக்கப்பட்டார். இடையில் நடந்த ஒரு துக்கச் செய்திக்குப் (திரு. பழனி பிள்ளை மறைவு) பிறகு, இடைத் தேர்தல் நடந்து, இப்போது தோழர் சண்முகம் வெற்றி பெற்றிருக்கிருர்.

இந்த வெற்றி குறித்து நமது கழகத் தோழர்கள் மட்டுமல்லாது முஸ்லிம்லீக் தோழர்களும் மெத்த மகிழ்ச்சியடைந்துள்ளார்கள்.

இதைவிடப் பெரிய வெற்றிகள் பல கண்ட காங்கிரசுக் கட்சியினரோ, நாம் கொண்டாடும் விழாவைப் பார்த்து, 'இது என்ன பெரிய வெற்றி? இது ஒரு வெற்றியா? இதற்கு இப்படிக் கொண்டாட வேண்டுமா?' என்றுபேசிக் கொள்ளக்கூடும்.

நம் வீட்டில் பிறந்த குழந்தை 'அம்மா' என்று அரையும் குறையுமாகச் சொல்ல ஆரம்பித்ததும், அடுத்த வீட்டுக்காரரையும் எதிர் வீட்டுக்காரர்களையும் அழைத்து வந்து காட்டி, 'பாருங்கள், பாருங்கள்; எங்கள் குழந்தை பேச ஆரம்பித்துவிட்டது' என மகிழ்ச்சி பொங்கக் கூறி மகிழ்வோம்.

மணமாகியும் பிள்ளை பெருத பெண்மணி, அந்தக் குழந்தையின் பேச்சைக் கேட்டு, 'இது என்ன பெரிய பேச்சா?' என்று சலித்துக் கொள்வாள்.

அதைப்போல இன்றைக்கு மாற்றுக் கட்சியினர், நமதுவெற்றி பற்றி வேறு விதமாகப் பேசினாலும், இது உண்மையான சனநாயகவாதிகளுக்கு மெத்த மகிழ்ச்சிதரத்தக்க வெற்றியாகும்.

—(0)—

### சென்னைக் கூட்டத்தில் அறிஞர் அண்ணா வெற்றி முரசம்!

நாங்குநேரியிலும், போடியிலும் காங்கிரசு வெற்றி பெற்ற செய்தியை காமராசர், தலைமையமைச்சர் நேருவிடம் சொல்ல, அதை நேரு அவர்கள் இதே கடற்கரையில் நடந்த கூட்டத்தில் களிப்புடன் எடுத்துச் சொன்னார்.

பருகாபாத்திலும், அம்ரோகாவிலும், இராஜ்கோட்டையிலும் தோல்விகண்ட நேரு, தமது பிரதம சீடரான காமராசர் நாங்குநேரியிலும், போடியிலும் வெற்றி தேடித் தந்ததற்காக அவரைப் பாராட்டி, திருவண்ணாமலையிலும் என்ன நேரும் என்பதையும் கூறினார்; 'அங்கேயும் நாம்தான் வெற்றி பெறுவோம்; கவலைப்படாமல் டெல்லி போய்ச் சேருங்கள்' என்று நேருவிடம் கூறிவிட்டு, மெருகு குலையாத மோட்டார் காரில் ஏறிக்கொண்டு திருவண்ணாமலைக்குப் புறப்பட்டார் காமராசர்!

திருவண்ணாமலையில் முழு நம்பிக்கை வைத்திருந்தார்கள் காங்கிரசுக்காரர்கள்! நிருபர்கள் கேட்ட நேரத்தில்கூட, 5000 வாக்கு வித்தியாசத்தில் காங்கிரசு வெற்றி பெறும்' என்று அமைச்சர் மன்ருடியாரும், '9,000 வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறுவோம் என்று தமிழ்நாடு காங்கிரசுத்தலைவர்கிருஷ்ணசாமி நாயுடுவும் கூறினர்.

"நாங்கள்தான் வெற்றி பெற்றுவிட்டோம்; வாக்குகள்தான் எவ்வளவு என்று தெரியவில்லை" என்று மெத்த நம்பிக்கையோடு கூறினாராம் காமராசர்!

இப்படிச் சொன்னதை சில நிருபர்கள் என்னிடம் வந்து சொன்னார்கள்!

"பத்தாயிரம் வாக்கு வித்தியாசத்தில் நான் வெற்றிபெறுவேன்" என்று காங்கிரசு வேட்பாளர் பத்திராசலம்பிள்ளை சொன்னதுடன், 'இந்தத் தேர்தலோடு தி. மு. கழகத்திற்குச் சமாதி கட்டப்படும்' என்றும் சொன்னார்!

அத்துடன் இருந்திருந்தால் கூட அரசியல் நாகரிகம் என்று கூறலாம்; அதுவுமில்லை; 'ப. உ. சண்முகம் குடும்பமே இத்துடன் அஸ்தமித்துவிடும்' என்றும் அநாகரிகமாக—பகிரங்கமாகக் கூறியிருக்கிருர்!

இத்தனைக்குப் பிறகும், நாம் வெற்றி பெற்றிருப்பது அவர்களுக்கு எரிச்சலை மூட்டி விட்டிருக்கிறது.

நாம் இந்த வெற்றியைக் கண்டு மகிழ—கொண்டாட— உற்சாகம் பெற எல்லா உரிமையும் இருக்கிறது.

திருச்செங்கோடு தேர்தலில் நமது கழகம் வெற்றி பெற்றதற்கு டெல்லியில் இவர்கள் காட்டிய காரணம் என்ன தெரியுமா?—

"தி.மு. கழகத்தவர், 'இரத்தக் கறை' சுவரொட்டிகளை வைத்தார்கள்; மக்கள் கண்கலங்கி வாக்களித்துவிட்டார்கள்" என்று கூறி, எல்லா பாரத்தையும் அந்தச் சுவரொட்டிமீது போட்டார்கள்!

டெல்லியில் உள்ளவர்கள் சிலர் என்னிடம்கூடக் கேட்டார்கள்— 'சுவரொட்டி மூலம் வெற்றி பெற்றுவிட்டீர்களாமே' என்று!

அதற்கு நான் சொன்னேன்— 'அரசியல் வெற்றி அவ்வளவு சுலபமாகக் கிடைக்குமானால், அழகான சுவரொட்டிகளுக்குப் பஞ்சமில்லை' என்று!

இன்னொரு காரணமும் கூறினார்கள்; அதாவது, "அண்ணாதுரையும் கருணாநிதியும், மற்றத் தலைவர்களும் சிறையில் இருப்பதாகக் கூறி மக்களிடம் போய் ஓட்டுக் கேட்டதால், மக்களும் 'போனால் போகிறது' என்று ஓட்டுப்போட்டுவிட்டார்கள்" என்று கூறினார்களாம்!

ஆனால் திருவண்ணாமலைத் தேர்தலின்போது 'இரத்தக்கறை' சுவரொட்டியும் ஒட்டவில்லை—நாங்களும் சிறையில் இல்லை!

திருச்செங்கோடு வெற்றிக்கு ஆராய்ச்சி செய்து காரணம் கண்டுபிடித்தவர்கள், இந்த வெற்றிக்கு என்ன சொல்லப் போகிருர்கள்?

போன தடவை, திருவண்ணாமலைத் தொகுதியில் நமது சண்முகம் அவர்களை 1,500 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்கள். இந்தத் தடவை, முன்னைவிட அதிகம் பாடுபட்டும், பணமூட்டையைக் கட்டவிழ்த்துவிட்டும், காலித்தனத்தை ஏவிவிட்டும் 1,500 வாக்குகள் வித்தியாசத்தில் காங்கிரசுத் தோற்கக் காரணம் என்ன? இதை அனைத்திந்தியக் காங்கிரசு யோசிக்க வேண்டும்.

இந்த வெற்றி, 'பிரிவினைக் கொள்கைக்காகக் கிடைத்த வெற்றி' என்று நான் சொல்லமாட்டேன்; 'அதற்குத்தானா?' என்று ஆராயவேண்டியவர்கள் நீங்கள் (காங்கிரசார்)தான்.

நான் திருவண்ணாமலையில் நண்பர் ப. உ. சண்முகம் வீட்டில் அமர்ந்திருந்தபோது, வீதியிலே ஒரு கம்யூனிஸ்டு ஊர்வலம் வந்தது. அதில் வந்தவர்கள் 'கிடைக்காது, கிடைக்காது—திராவிட நாடு கிடைக்காது' என்று முழங்கிக்கொண்டு வந்தார்கள்.

நாங்கள் பிரிவினைபற்றிப் பேசவில்லை. அங்கு எங்களை எதிர்த்து பிரசாரம் செய்தவர்களெல்லாம்

### சட்டமன்றத்தில் வெண்கலக் குரல்!

—(0)—

ஓராண்டுக்கு முன்புவரை சட்டமன்றத்தில் ஒலித்துக் கொண்டிருந்த ஒரு வெண்கலக் குரல் இனி மீண்டும் ஒலிக்கப்படவிருக்கிறது.

ஓராண்டுக்குமுன் கேட்கப்பட்ட ஏராளமான குறுக்குக் கேள்விகளை அமைச்சர்கள் சந்திக்கும் நேரம் வந்திருக்கிறது!

நாவலர் நெடுஞ்செழியன் தலைமையில் சட்டமன்றத்தில் உள்ள நமது தோழர்களுடன் 51-வது பேராக ப. உ. சண்முகம் சட்டமன்றம் செல்ல இருக்கிருர்; இவர் அங்கு நல்ல சனநாயகப் பணி ஆற்ற இருக்கிருர்! இது நமக்கெல்லாம் நல்ல மகிழ்ச்சிதரக் கூடியதாகும்!

—சென்னைக் கூட்டத்தில் அண்ணா

## நமது அரசியல் கூட்டுறவு!

நாம் வெற்றி பெறக்கூடும் என்ற இடத்தில் முஸ்லீம் லீக் நமக்கு துணை நிற்கிறது. அதைப்போலவே முஸ்லீம் லீக் வெற்றி பெறக்கூடிய இடத்தில் நாம் அவர்களுக்குத் துணை நிற்கிறோம். அதற்குப் பெயர் கூட்டுறவு.

நமக்கும் முஸ்லிம் லீக்கிற்கும் ஏற்பட்டிருக்கும் கூட்டுறவு திருவண்ணாமலையில் ஏற்பட்டதல்ல. நமக்கும் லீக்குக்கும் ஏற்பட்டிருக்கும் கூட்டுறவு தேர்தலுக்காக ஏற்பட்டதல்ல!

எங்களுக்கும் முஸ்லிம் லீகத்துக்கும் இருக்கின்ற கூட்டுறவு நாங்கள் தேர்தலுக்கு நிற்காத காலத்தில் தேர்தலுக்கு நிற்போமா என்ற எண்ணமே ஏற்படாத காலத்தில் ஏற்பட்ட கூட்டுறவாகும்.

அது நேசத்தின் அடிப்படையில் பாசத்தின் அடிப்படையில் இன்னமும் சொல்லப்போனால் இன அடிப்படையில் ஏற்பட்ட கூட்டுறவாகும்.

இதைக் கேலி பேசுவதன் மூலம் கத்தறித்து விட்டு விடலாம் என்று யாராவது கருதுவார்களேயானால் அவர்கள் விவரம் தெரியாதவர்களே தவிர வேறு கடுமையான வார்த்தைகளைச் சொல்லி இந்த மகிழ்ச்சியான நேரத்தில் என்னுடைய நாக்கை நான் அசிங்கப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை.

—சென்னை வெற்றி விழாக் கூட்டத்தில் அண்ணா

'பிரிவினைக்காக ஓட்டுப்போடாதீர்கள்' என்று சொன்னார்கள்.

அவர்கள், 'பிரிவினைக்கு ஓட்டுப்போடாதீர்கள்' என்றார்கள்; எங்களுக்கு ஓட்டுக்கள் கிடைத்தன!

நாங்கள் மேடையில் ஏறி நின்றாலே, 'பிரிவினை கேட்பவர்கள்' என்றுபொருள்! நாங்கள் வாயைத் திறந்து கேட்கத் தேவையில்லை!

கோயில் என்றாலே, 'சீரங்கம் கோயில்தான்' என்று பக்தர்கள் கூறுவதுபோல், 'தி. மு. கழகத்தவர் என்றாலே பிரிவினை கேட்பவர்கள்' என்றுதான் பொருள்.

'அப்துல்சமத் பேசுவார் என்பதற்குப் பதில், 'அப்துல்சமத் என்னும் ஒரு முஸ்லீம் வாலிபர் பேசுவார்' என்று சொன்னால் என்ன பொருள்?

அப்துல்சமத் என்ற பெயரைச் சொன்னாலே, 'அவர் ஒரு முஸ்லீம்' என்பதை அறிவீர்கள்; இதைச் சொல்லித் தெரிந்து கொள்ளத் தேவையில்லை.

அதைப்போலவே, நாங்களும் பிரிவினை கேட்பவர்கள்—என்று சொல்லத் தேவையில்லை.

இன்று அரசியல் காற்று எந்தப் பக்கம் வீசுகிறது என்பதை அரசியலில் நீண்ட காலமாக இருந்து மறந்துபோன காங்கிரசு அரசியல்வாதிகள் எண்ணிப்பார்க்கவேண்டும்.

நான் பேசிக்கொண்டிருக்கும் போது, 'இந்த ஒலிபெருக்கி நன்றாக வேலை செய்கிறது' என்று எவரும் பாராட்டமாட்டார்கள். திடீரென்று இது வேலை செய்யாமல் நின்றுவிட்டால், உடனே எல்லோரும், 'இப்படி நின்றுவிட்டதே' என்று கவலைப்படுவார்கள்

இங்கே எரிகின்ற விளக்குகள், எரிந்து கொண்டிருக்கும்போது 'அவை நன்றாக ஒளித்து கொண்டிருக்கின்றனவே' எனக் கூறமாட்டார்கள்; அவை திடீரென நின்றுவிட்டால்தான், 'நின்றுவிட்டதே' என்று கவலைப்படுவார்கள்!

அதைப்போல, நாம் திருவண்ணாமலையில் தோற்றிருந்தால் நீங்களெல்லாம் எவ்வளவு பதறிப் போயிருப்பீர்கள்?

மாற்றுக் கட்சியினர் எவ்வளவு கிண்டல் கேலிகளை வீசியிருப்பார்கள்!

எத்தனை பேர் புத்திசொல்லக் கிளம்பியிருப்பார்கள்!

"இந்த அண்ணாதுரை, இனியாவது பிரிவினைக் கொள்கையைக் கைவிடுவார் என்று எதிர்பார்க்கிறேன்" என்று சிலர் பேச ஆரம்பித்திருப்பார்கள்.

இன்று கிடைத்துள்ள வெற்றி ப. உ. சண்முகத்துக்கு மட்டும் கிடைத்த வெற்றியல்ல-சனநாயகத்துக்குக் கிடைத்த வெற்றியாகும்!

இராமன் வனவாசம் கூட 14 ஆண்டுகள்தான்! இந்தக் காங்கிரசாட்சியில் 15 ஆண்டுகளாக மக்கள் 'வனவாசம்' அனுபவிகக நேர்ந்ததால்-ஆளும் கட்சியைத் தட்டிக் கேட்கும் வலிவு ஒவ்வொரு மாநிலத்திலும் இல்லாததால், மக்களுக்கு ஒருவித பீதி ஏற்பட்டு விட்டது; "நாம் ஏன் எதிர்த்து நாசமாக வேண்டும்? ஊருடன் ஒத்துப் போவோம்" என்ற அரசியல் வைதீக மனப்பான்மை ஏற்பட்டு விட்டது.

அந்த அரசியல் வைதீகத்தை முறியடிக்க முடியும் என்ற நம்பிக்கையை திராவிட முன்னேற்றக் கழகம் திருவண்ணாமலையில் ஏற்படுத்தி யிருக்கிறது. இந்த வெற்றிக்காக ஒத்துழைத்த அனைவரையும் மனமாரப் பாராட்டுகிறேன்.

○

### 4-ம் பக்கத் தொடர்ச்சி

றும், ஆனால் தி. மு. க. தலைவர் அண்ணா அவர்கள் மூன்றே நாட்கள் மட்டுமே திருவண்ணாமலையில் முகாமிட்டுச் சுற்றுப்பயணம் மேற்கொண்டாரென்றும், குறிப்பிட்டிருக்கிறது. அத்துடன் தி. மு. கழகத் தோழர்கள் உணவு பற்றிகூட கவலைப்படாமல் கட்டுப்பாடுடன், உறுதியுடன் தேர்தல் பணியில் ஈடுபட்டார்களென்றும் காங்கிரஸ் தொண்டர்களிடத்தில் அந்த உணர்ச்சி காணப்படவில்லையென்றும், எனவே தி. மு. கழக வெற்றிக்கு இதுவும் ஒரு காரணம் என்றும் குறிப்பிட்டிருக்கிறது.

இந்தச் செல்வத்தைப் பெற்றெடுத்த தாய்தந்தையரின் சிறப்பே சிறப்பு என்று மற்றவர்கள் புகழும் வகையில் நடப்பது தான் ஒருவன் தனது பெற்றோருக்குச் செய்யும் நன்றி என்ற வள்ளுவரின் அறத்திற்கேற்பவே திருவண்ணாமலைக்கு வந்திருந்த கழகத் தோழர்கள் ஒவ்வொருவரும் அறிஞர் அண்ணா அவர்களின் எண்ணத்திற்கேற்ப தேர்தல் பணியில் அமைதியாகவும், உறுதிப்பாடாகவும், கட்டுப்பாடாகவும் பணியாற்றினார்கள். மாற்றாரும், அரசியல் நடுநிலையாளர்களும் நமது தொண்டினைப் பாராட்டும் அதே சமயத்தில் காங்கிரசாரின் தவறான போக்கினையும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அறிஞர் அண்ணா அவர்களுக்கும் கழகத்திற்கும் இதைவிட பெருமையளிக்கத்தக்கது வேறுயிருக்க முடியாது. தேர்தல் பணியானாலும், அறப்போராட்டமாயினும் நம்மிடையே மேலும் மேலும் இந்தக் கட்டுப்பாடும், அமைதியும், உறுதிப்பாடும் ஓங்கி வளர வேண்டும் என்று கேட்டுக்கொள்வதுடன் அருமைத் தோழர். ப. உ. சண்முகம் அவர்களை இதய பூர்வமாகப் பாராட்டுகிறேன்.

—என்று, அமைப்புசெயலாளர் என். வி. நடராசன் அவர்கள் திருவண்ணாமலையில் 4—7—63 அன்று மாலை நடைபெற்ற வெற்றி விழாக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

○

### கலையும்-நிலையும் தொடர்ச்சி ... ... ...

வசனத்தை உருவாக்கி யிருக்கிறார். அளவோடும் பாராட்டும் வகையிலும் அமைந்திருக்கிறது. கவிஞர் கண்ணதாசனின் நினைக்கத் தெரிந்த மனமே—மழை இல்லாத மார்கழியா, போன்ற பாடல்கள் ரசிகர்களின் காதுகளில் என்றும் ஒலித்துக்கொண்டே யிருக்கக் கூடியவைகளாகும்.

#### டைரக்ஷன்—ஒலிப்பதிவு

துவக்கம் முதல் இறுதிவரை சிறிதும் சலிப்பு ஏற்படாமல் விறுவிறுப்புடன் விளங்கக் கூடிய வகையில் டைரக்ஷன் செய்துள்ள திரு. வி. என். ரெட்டி, எ.எஸ்.எ. சாமி பி.எ. ஆகியோரும், ரசிகர்களின் 'சபாஷ்' பட்டத்தைப் பெறுகிறார்கள். ஒளிப்பதிவாளர் ஜே. ஜி. விஜயம் தமது திறமையை நன்கு வெளிப்படுத்தியிருக்கிறார். குறிப்பாக 'கடவுள் இருக்கிறார்' என்று பாடும் கட்டத்தை படமாக்கியிருப்பது ஓர் தனிச்சிறப்பாகும்.

#### திக்கெட்டும் ஜோதி!

எனவே, அருமைத் தோழா! ஆனந்த ஜோதி! திக்கெட்டும் ஒளிவீசும் சிறந்த படைப்பு என்பதே ரசிகர் பெருமக்களின்—ஏன் அனைவரின் ஒருமித்த தீர்ப்பாகும். நீயும் உனது குடும்பத்துடன் அந்த ஜோதியைக் கண்டு மகிழ்வாயாக!

அன்புள்ள

தோழன்

**வீரன்**

## திருவண்ணாமலை வெற்றி விழா நிகழ்ச்சிகள்

தனுஷ்கோடி பாசஞ்சர் வண்டி மூலம் தோழர் ப. உ. சண்முகம் அவர்கள், சரியாக 5-10 மணியளவில் எழும்பூர் இரயில் நிலையம் வந்தடைந்தார்.

அவருடன் வ. ஆ. மாவட்டச் செயலாளர் இரா. தர்மலிங்கம் எம்.பி., முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி. எஸ். சந்தானம் ஆகியோரும் வந்தனர்.

ப. உ. ச. அவர்களைத் தலைமைக் கழகச் சார்பில் அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் மாலை அணிவித்து வரவேற்றார்.

சென்னை மாவட்டச் செயலாளர் நீலநாராயணன், துணைச் செயலாளர் சு. பாலன் எம்.சி., பொருளாளர் டி. கே. கபாலி எம்.சி., முன்னாள் மேயர் அ. பொ. அரசு மற்றும் மாவட்ட—வட்டப் பிரதிநிதிகள், கிளைக் கழகச் செயலாளர் ஆகியோரும் மாலையணிவித்து வரவேற்றனர்.

முஸ்லிம் லீக் சார்பில் திரு. அப்துஸ்சமத் வரவேற்றார்!

திரு க. அன்பழகன்எம்.எல்.சி. அவர்களும் மாலை அணிவித்தார்.

அன்று மாலை சென்னை கடற்கரையில் மாபெருங் கூட்டம் திரு. நீலநாராயணன் தலைமையில் நடைபெற்றது. சத்தியவாணி முத்து, மேயர் குசேலர், இரா. தருமலிங்கம் எம்.பி., அப்துல் சமத் ஆகியோர் பேசியபின் வெற்றிவீரர் ப. உ. ச. அனைவருக்கும் நன்றி கூறி சொற்பொழிவாற்றினார். ஏராளமான கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் அவருக்கு அணிவிக்கப்பட்டன. பின்னர், தோழர் என். வி. நடராசன், கலைஞர் கருணாநிதி, அறிஞர் அண்ணா சொற்பொழிவாற்றினர்.

# எனது வெற்றி கழகத்தின் மாபெரும் வெற்றி - ஜனநாயகத்தின் மகத்தான வெற்றி !

2-ம் பக்கத் தொடர்ச்சி

—திருவண்ணுமலைக்கு, சாத்தூரிலிருந்து தண்ணீர் கொண்டுவரும் திட்டத்தை, 29-ந்தேதி தேர்தல் 27-ந்தேதி அவசர அவசரமாகக் கோட்டையிலிருந்து உத்தரவு போட்டுவிட்டு, துண்டுவெளியீடு வெளியிட்டார் காமராசர்!

'' காங்கிரசுக்கு ஓட்டுப்போடுங்கள்; சாத்தூரிலிருந்து தண்ணீரை திருவண்ணுமலைக்குக் கொண்டு வருகிருேம்; நாற்பத்தேழரை இலட்சம் ரூபாய் கடனுக நகர சபைக்குக் கொடுத்திருக்கிருேம்'' என்று வெளியிட்டார் முதலமைச்சர் !

அதுமட்டுமல்ல; அவசர அவசரமாக, '' திருவண்ணுமலையில் தொழிற்பேட்டை ஏற்படுத்தப் போகிருேம் ; காங்கிரஸ் வெற்றி பெற்ருல்தான் தொழிற்பேட்டை நிலைக்கும் ; காங்கிரசு தோற்ருல் தொழிற்பேட்டையைப் பின்வாங்கிக் கொள்வோம் '' என்று பகிரங்கமாகச் சொன்ஞர் !

இவ்வளவு பயமுறுத்தல்கள் மட்டும்தான் என்று எண்ணுதீர்கள் !

கிராமத்திலே இருக்கின்ற முக்கியமானவர்களையும், யார் யார் தி. மு. கழகத்திற்கு வேலை செய்கிருர்கள் என்று கண்டறிந்து அவர்களையும் சந்தித்துப் பிடித்து, ஆசைவார்த்தை காட்டி — பயமுறுத்தி—பணத்தையும் காட்டினர் !

இவ்வளவையும் இலட்சியம் செய்யாதிருந்தவர்களைப் போலீசாரை விட்டுப் பயமுறுத்தி, அவர்கள்மீது தேவையில்லாத வழக்குப் போட்டுப் பல தொந்தரவுகளைக் கொடுத்து வந்தார்கள் தேர்தலுக்கு முன்ஞல்!

இவ்வளயையும் செய்து பார்த்து முடிந்தானதற்குப் பிறகு, தோல்வியை ஒப்புச்கொள்ள வேண்டிய முதலமைச்சர் அவர்கள்—திருவண்ணுமலையில் நடைபெற்ற அரசியல் அநாகரிகத்திற்கு வருத்தம் தெரிவிக்க வேண்டியவர்—இதுவரை வாய்மூடி மௌனியாக இருக்கிருரே, என்ன காரணம்?

திருவண்ணுமலையில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றது என்ருல்—நான் வெற்றி பெற்றேன் என்ருல்—என்னுடைய பெருமுயற்சியினுல்தான் வெற்றி பெற்றேன் என்று ஒரு நாளும் நான் ஒப்புக்கொள்ளுவதற்குத் தயாராக இல்லை.

**இது என்னுடைய வெற்றி அல்ல; பலமாவட்டங்களிலிருந்து வந்தவர்கள் தலைமைக் கழகத்திலே பணியாற்றும் பெருந்தலைவர்கள்—அறிஞர் அண்ணு அவர்களும், கலைஞர் கருணுநிதியும், நாவலர் நெடுஞ்செழியனும், நண்பர் நடராசனும், கோவிந்தசாமியும் மற்ற தலைவர்கள் எல்லாம் அந்த இடத்தில் முகாமிட்டு எனக்காக அல்ல—தி. மு. கழகத்திற்காக அரும்பாடுபட்டிருக்கிருர்கள்.**

குறிப்பாகக் கலைஞர் கருணுநிதி அவர்கள் இரவுபகலாக அங்கேயே தங்கி, நான் அயர்ந்து தூங்கிவிட்டாலும்கூட என்னை சண்டைபோட்டுத் தட்டி எழுப்பி 'ஏன் இன்றும் தூங்குகின்ருய்?' என்று கூறி கிராமங்களுக்கு எல்லாம் அழைத்துச் சென்ருர்.

நானும் எனது குடும்பத்தாரும், தி. மு. கழகத் தலைவர்களுக்கு என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிருேம்.

இதேபோல், புரட்சிநடிகர் எம். ஜி. இராமச்சந்திரனும், இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரனும், நடிப்பிசைப்புலவர் கே. ஆர். இராமசாமியும் திருவண்ணுமலைக்கு வந்து பேருதவி புரிந்திருக்கிருர்கள். அவர்களுக்கெல்லாம் நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சென்னை மாநகராட்சித்தலைவர், முன்ஞள் தலைவர்கள் எல்லாம் அங்கே வந்து முகாமிட்டுப் பேருதவி புரிந்திருக்கிருர்கள்; அவர்களுக்கு எல்லாம் என் நன்றி !

வந்தவர்கள் அத்தனை பேர்களும் சாதாரணமானவர்கள்தான் —சக்தி வாய்ந்த அதிகாரத்தை கையிலே வைத்துக்கொண்டிருப்பவர் அல்லர் !

ஆட்சியாளர்களே! இலட்சச் கணக்கான பணமுள்ள மூட்டைகளை அவிழ்த்தீர்கள்! எங்கள் இலட்சியத்தை முன்னிறுத்தி நாங்கள் நின்ருேம்! தேர்தலில் நின்று வெற்றி பெற்றிருக்கின்ருேம்.

முதலமைச்சரே! நான் இந்தத் தேர்தலில் தோற்றிருந்தால் அது மிகச் சாதாரண காரியம்! நான் தோற்றிருந்தால் மிகமிகச் சாதாரண காரியம்! என்னுடைய வாழ்க்கையில் வெற்றியும் தோல்வியும் அதிக வேறுபாட்டைச் செய்துவிடவில்லை !

15 மாதங்களுக்கு முன்பு இதே இடத்தில், இதே மேடை போட்டு நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டத்தில் அண்ணு அவர்களும், நாங்கள் எல்லோரும் கலந்துகொண்ட போது, அறிஞர் அண்ணு அவர்கள் என்னுடைய பக்கத்தில் இருந்தார். நான் நன்றி தெரிவித்துவிட்டு அன்று பேசிவிட்டுப் போனேன்.

எனவே, எங்களுக்கு வெற்றி தோல்வியில் அதிகம் மாற்றம் ஏற்பட்டுவிடப் போவதில்லை.

நான் தோற்றிருந்தால் மிகச் சாதாரண விஷயம்; ''இவ்வளவு அமைச்சர்கள் வந்தார்கள்-தோற்ருன் சண்முகம்; இவ்வளவு லட்சம் ரூபாய்ச் செலவு செய்தார்கள் —தோற்ருன் சண்முகம்'' என்று உலகம் என்மீது அனுதாபம் தெரிவித்திருக்கும்.

அமைச்சர்களைக் கேட்கிறேன் —'உங்களுடைய முழுச் சக்தியையும் பயன்படுத்தி—இலட்சக் கணக்கான ரூபாய்களைச் செலவழித்து—உங்களுடைய அதிகாரங்கள் அத்தனையும் பயன்படுத்தி —பஸ் முதலாளிகளையும், பெரும் அளவில் நிலம் வைத்திருக்கும் நிலச்சுவான்தாரர்களையும், ஆலை முதலாளிகளையும், பெரிய பெரிய வியாபாரிகளையும் கொண்டுவந்து பணத்தை அள்ளி அள்ளிக் கொடுத்தான பிறகு, தோல்வியுற்றீர்கள் என்ருல் நாளைய தினம் எங்களைச் சட்டமன்றத்தில் எப்படிச் சந்திக்கப்போகிறீர்கள்?

நான் அமைச்சர்களைக் கேட்கின்றேன்—இத்தனைக்கும் நீங்களே நேரிடையாக ஈடுபட்டிருக்கிறீர்கள்! உங்களுடைய தலைமையிலேயே அந்த தேர்தல் நடைபெற்றது !

அதிகாரத்தைக் கையில் வைத்துக்கொண்டிருக்சின்ற அமைச்சர்கள், அங்கு சுற்றுப்பயணம் செய்தது தவறு! தேர்தல் காலத்தில் ஆசை வார்த்தை ஊட்டியது தவறு! தேர்தல் நேரத்தில் அமைச்சர்களே முன்னின்று பணத்தை எடுத்துக் கொடுத்தது தவறு !

பணத்தை எடுத்துக் கொடுத்தான பிறகு தேர்தலில் தோற்றுவிட்டீர்கள் !

தோற்று ஆனதற்குப் பிறகு நீங்கள் தொடர்ந்து மந்திரியாக இருப்பது தவறு—தவறு !''

●

## இளங்கோ மன்றம்

### சயான்—பம்பாய்-22.

*

திருவண்ணுமலை இடைத்தேர்தல் வெற்றிச்செய்தி 30—6—63 நள்ளிரவு 12-30 மணியளவில் கிடைத்தவுடனே பம்பாயிலுள்ள கழகக் கிளை—சார்பு மன்றத் தோழர்கள், ஆதரவாளர்கள் அனைவருமே ஆங்காங்கே இனிப்புகள் வழங்கியும்—அதிர்வேட்டுகள் வெடித்தும் வெற்றிக் களிப்பிலாழ்ந்தனர்.

சயான்—இளங்கோ மன்றச் சார்பில் 1—7—63 இரவு 11 மணியளவில், பம்பாய் தி. மு. கழகச் செயலாளர் தோழர் எஸ். தியாகராசன் அவர்கள் தலைமையில் வெற்றி விழாக் கூட்டம், இனிப்பு—சுவைநீர் வழங்கலுடன் அதிர்வேட்டுகள் முழங்க துவங்கியது.

தோழர்கள் த. மு. பொற்கோ, எம். துரைப்பாண்டியன், வாசன் ஆகியோர் எழுச்சி முரசங் கொட்டினர்.

பம்பாய் தி. மு. கழகச் செயலாளர் எஸ். தியாகராசன் அவர்கள் கொடியேற்றிவைத்து அரியதோர் உரையாற்றிஞர்கள்.

செயலாளர் இளஞ்சாலை நன்றி நவில இரவு 12-30 மணியளவில் கூட்டம் சீருற முடிவுற்றது.

○

தமிழ் மக்களால் நன்மதிப்புப் பெற்ற
வெண்சங்கு சீயக்காய்த் தூள்
எங்கும் கிடைக்கும்.
மணத்தில் மிகுந்த
செல்வம் ராணி ஊதுபத்திகளை
உபயோகியுங்கள்.

●

தயாரிப்பாளர்கள் :
வெண்சங்கு சீயக்காய்த்தூள் பாக்டரி
3037—38 டபீர்குளம் ரோடு, தஞ்சை

# ஆனந்த ஜோதி

—(0)—

அன்புள்ள தோழா,

வணக்கம். திரைப்பட உலகப் புகழ்மிக்க வில்லன் வீரப்பா அவர்கள் படத் தயாரிப்பாளராகவும் மாறி இதற்கு முன்பு தயாரித்த இரண்டு படங்களைவிட இன்னும் சிறப்பாக "ஆனந்த ஜோதி" திக்கெட்டும் ஒலி வீசுகிறதென்று கூறினுல் மிகையாகாது.

ஆனந்தன் — ஜோதி என்ற காதலர்களின் உள்ளங்களில் வளர்ந்த ஆசைகளைச் சித்தரித்து உருவாக்கியுள்ள சிறந்த படைப்புதான் ஆனந்த ஜோதி!

ஆனந்தனுக புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களும், ஜோதியாக திருமதி **தேவிகா**வும் நடிக்கிருர்கள்! காதல் பாதை யென்ருல் கரடு முரடாகத்தானே யிருக்கும். அதையெல்லாம் தாண்டித்தான் ஆனந்த ஜோதியைக் காண முடிகிறது!

**முடிசூடா மன்னன்**

புரட்கி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களின் நடிப்பில் வர வர மெருகு ஏறுகிறது. திரைப்பட உலகின் முடிசூடா மன்னனுக விளங்குகிருர் என்று நான் கூறுவதை, திரைப்படத் துறையில் எத்தனை கோஷ்டிகளிருப்பினும் அவர்கள் அனைவரும் மனசாட்சியுடன் தீர்ப்பு கூறுவதென்ருல் எனது கருத்தை மனதார வரவேற்பர் என்றே நம்புகிறேன். வில்லன் வீரப்பாவுடன் மோதும் காட்சிகளில் எம். ஜி. ஆர். அவர்களின் நடிப்பு உச்சகட்டத்தில் நின்று பரணி பாடுகிறது. மற்றும் புதுமையான நடிப்பின் மூலம் ரசிகர்களுக்கு திகட்டாத விருந்தை அளிக்கிருர்.

**முன்னணி நடிகை!**

திருமதி தேவிகாவும், எம். ஜி. ஆர். அவர்களுடன் தோன்றும் இப்படத்தில் தனது திறமையைக் காட்டவேண்டும் என்ற ஆர்வத்தில் சிரமப்பட்டு நடித்திருக்கிருர். காதல் கட்டங்களில் தேவிகா சிறிதும் சோடை போகாமல் நடித்திருப்பதுடன் கண்ணீர் சிந்தும் கட்டத்திலும் ரசிகர்களின் சபாஷ் பட்டத்தைப் பெறுகிருர். முன்னணி நடிகைகளில் முதல் நடிகையாக விளங்கவேண்டும் என்ற ஆர்வத்துடன் நடித்துள்ள தேவிகாவின் நடிப்பிலும் மெருகு ஏறியிருக்கிறது.

**வில்லன் வீரப்பா!**

வீரப்பாவின் பயங்கர சண்டை காட்சிகளை ரசிகர்கள் கண்டு களித்து நீண்டகாலமாகிவிட்டது. அந்த இடைவெளிக்குப் பிறகு ஆனந்த ஜோதியில் தனது முழு திறமையையும் காட்டியிருக்கிருர்! படத் தயாரிப்பாளர் ஆயிற்றே என்ற தயவு தாட்சண்யம் சிறிது கூட யில்லாமல் எம். ஜி. ஆர். இவருடன் மோதும்போது அதற்கு ஈடு கொடுத்து நடிக்கும் பயங்கர காட்சிகள் அபாரம்!

**அசோகன்—கமலஹாசன்**

புகழேணியில் ஏறிச் சென்றுக்கொண்டிருக்கும் திரு. அசோகனுக்கு இப்படத்தில் கிடைத்த பாகம் குறைவு. ஆனுலும் ரசிகர்கள் நிறைவு கொள்ளும்படி நடித்திருக்கிருர். அதுபோலவே பொடி நடிகன் கமலஹாசன் பெரிய நடிகர்களுக்கு சிறிதும் சளைக்காமல் நடித்திருப்பது பாராட்டத்தக்கதாகும். மற்றும் திரு சகஸ்ரநாமம் இராமதாசன், திருமதி மனேரமா ஆகியோரும் கச்சிதமாக நடித்துள்ளனர்.

**கதை—வசனம்—பாடல்கள்**

திரு. ஜாவர் சீதாராமன், கதை

(5-ம் பக்கம் பார்க்க)

ஆசிரியர், வெளியிடுபவர், என். வி. நடராசன், அச்சிடுபவர், புவனேசுவரி—சோமு அச்சகம், 16, இப்ராகிம் சேட் தெரு, சென்னை-1